Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 31 (14 . 05 . 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 85

## 21-ம் நூற்றாண்டு நடுவில் 1000கோடியாக அதிகரிப்பு

(நியூயோர்க்)

உலக சனத்தொகை அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆயிரம் கோடியாக அதிகரிக்கக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. ஐ. நா. சபை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தற்போது உலக சனத்தொகை 540 கோடியாக இருந்தபோதும், அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆயிரம் கோடியாக அதிகரிக்கக்கூடும் என (4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவில் பொதுத் தேர்தல்?

## அரசியல் அவதானிகள் ஆரூடம்!

(கொழும்பு)

சிறிலங்காவில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்படலாம் என அரசியல் அவதானிகள் கருதுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஐ. தே. க. அமோக வெற்றிபெற்றதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தின் ஆயுள்காலம்முடியுமுன்னரே பாராளுமன்றத்தை சிறிலங்கா ஜனாதிபதி கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தக்கூடும் எனவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது பாராளுமன்றத்தில் ஐக்கியதேசியக் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமையினால் அரசியற்சட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கு அக்கட்சி சிரமங்களை எதிர்நோக்குகின்றது. இதனை நீக்கும் பொருட்டே ஜனாதிபதி பிரேமதாசா இத்தீர்மானத்தை எடுக்கக்கூடும் எனவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தேர்தல் முடிவுகள் பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளதாகவும், ஐ. தே. கட்சிக்கு ஈடான கட்சி என்ற நிலையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி இழந்துவிட்டதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## காட்டுக்குள் தேட முயன்ற இராணுவம் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏழு இராணுவ முகாம்களில் இருந்தும் கூட்டாக வெளியேறி காட்டுப் பகுதியில் தேடுதலை மேற்கொள்ள முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமைச்சூழ விமானக் குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

ஆனையிறவு இராணுவமுகாமைச்சுற்றியபகுதிகளில் நேற்று முன்தினம் அவ்ரோ விமானம் ஒன்று பதினைந்து பீப்பாக் குண்டுகளை வீசியுள்ளது. இதில் இயக்கச்சிப் பகுதியை நோக்கி வீசப்பட்ட இரண்டு குண்டுகள் வெடிக்கவில்லை.

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாம்மீது இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பொதிகளை இவ்விமானம் வீசியது பெரும்பாலான பொதிகள் முகாமிற்கு வெளியிலேயே வீழ்ந்ததாகத்தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து பிற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மடு முகாமில் 80 வீதம் மன்னார், வவுனியா மக்கள்

மடு அகதி முகாமில் ஆறாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தையாயிரம் மக்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர் என அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து சென்ற மாணவர் குழு கணிப்பிட்டிருக்கிறது.

இந்தக் குழுவின் கணிப்பீட்டின்படி மடு அகதி முகாமில் உள்ள மொத்த சனத்தொகையில் நாற்பது வீதமான மக்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மேலும் நாற்பது வீதமான மக்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மீதி இருபது வீதமான மக்கள் முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருமலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகிறது.

## பதினொருநாள் மோதலில் 35 இராணுவத்தினர் பலி

### - சிறிலங்கா வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் கடந்த பதினொரு நாட்களாக நடாத்திய விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் முப்பத்தைந்து இராணுவத்தினர் உயிரிழந்ததாக சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்துள்ளன.

மேலும் இந்த நடவடிக்கையின்போது தாம் விமானப்படை விமானங்கள், உலங்குவானூர்திகள் என்பவற்றையும் பயன்படுத்திப்பெருமுயற்சி மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளன.

## சின்னமடு காவலரணில் பல ரக ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊரிகாவற்றுறை சின்னமடு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பாரிய காவலரண்மீது நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பத்து சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் காவலரண் முற்றாக அழிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இம்மோதலின்போது இராணுவத்தினரிடமிருந்து கைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இரு தமிழர் இராணுவத்தால் கைது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் இரண்டு தமிழ்ப்பொது மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் சட்டைபறிச்சானில் இருந்து கைமுறை தானுக்கு வந்த ஜீவரட்னம் துஸயநதன் (வயது 20 அம்மன் நகர்) சனசபை சுந்தரராசா (வயது 35 அம்மன் நகர்) ஆகிய இருவரையும் றால் பாலத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

## கரும்புலிகள் நினைவாக மாபெரும் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடந்த நான்காம் திகதி நடைபெற்ற கரும்புலித் தாக்குதலில் வீரமரணம் அடைந்த இரு போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ். குடாநாடெங்கும் இன்று மாபெரும் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இக்கூட்டங்கள் வலிகாமத்தில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும், வடமராட்சி (4 ஆம் பக்கம் பார்க்க)

### இடம் பெயர்ந்தோருக்கான

## மூன்று வார உலர் உணவே கையிருப்பில் உள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு மூன்று தடவைகளே தற்போதுள்ள உலர் உணவுப்பொருள்களின் கையிருப்பைப் பயன்படுத்தி உலர் உணவு விநியோகத்தை வழங்க முடியும் என்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்போது இடம் பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது.

இவர்களுக்கு மூன்று தடவைகள் வழங்குவதற்கும் ஏனையோருக்கான வழமையான உலர் உணவு விநியோகத்தை ஒரு தடவையும் மேற்கொள்வதற்குமே தற்போது உள்ள கையிருப்பு போதுமானதாக உள்ளது. இதன் பின்னர் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்த மக்களுக்குரிய வாராந்த உலர் உணவு விநியோகத்தையும் ஏனைய மக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு ஐந்து புதிய உ. அ. அதிபர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு புதிய உதவி அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு கே கேதீஸ்வரன் வடமராட்சி கிழக்குக்கும், திரு. எச். ஜோசப் ஊர்காவற்றுறைக்கும், செல்வி. பி. லோஜினி உடுவிலுக்கும், திரு. என். வேதநாயகம் நெடுந்தீவுக்கும், திரு எல். இளங்கோவன் வேலணைக்கும் இம்மாதம் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு அதிவிசேட எழுதுவினைஞர் சேவையில் உள்ளவர்களே பதில் உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். (க)

## யாழ். பல்கலைக்கழக டீசல் திருட்டு; கலப்படம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குக் கொண்டு வரப்பட்ட ஒருபரல் டீசலில் இருபத்தைந்து லீற்றர் டீசல் களவாடப் பட்டுள்ளதுடன் கணிசமான அளவு மண்ணெண்ணெயும் கலந்து இருக்கக் காணப்பட்டதென நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பல்கலைக்கழக அதிகாரிகள் கொழும்பு சென்று முப்படைகள் தலைமையகத்தில் பல குறுக்கு விசாரணைகளின் பின்னர் இந்த எரி பொருளை யாழ். பல்கலைக் கழகத்துக்குக் கொண்டு வருவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## தனிப்பட்ட பரீட்சார்த்திக்கு பாடசாலை அனுமதி இல்லை

(யாழ்ப்பாணம்)

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தற்காலிகமாக உயர்தர வகுப்பில் பயில்வதற்காகப் பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியாது என யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

க.பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் உயர்தர வகுப்பில் பயில்வதற்கு விரும்பிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அவர்களுக் (4 ஆம் பக்கம் பாரக்க)

# LONDON EXAMS
## Nov., Dec. 1991

| | | ஆரம்பம்: |
|---|---|---|
| C. I. M. A. | Stage 1 | 18-05-1991 |
| I. C. M. A ) | Stage 2 (I. T. M. Only) | 01-06-1991 |
| I. D. P. M. Computer | Part 1 | 18-05-1991 |
| A. A. T. | Stage 1 | 18-05-1991 |
| I. A. B. | Foundation | 18-05-1991 |
| | Intermediate | 18-05-1991 |
| | Final | 08-06-991 |
| Computer | Basic | 23-06-1991 |

லண்டன் நிறுவனங்களுடன் செய்யவேண்டிய பதிவுகள் எங்களால் செய்து தரப்படும்.

விரிவுரையாளர் குழு:
சத்தியதாஸ், சிவலிங்கம், மதி, சிவபாதசுந்தரம், சுந்தையா நவரேந்திரன், புஷ்பா, யோசப்.

மேலும் விபரங்களுக்கு:

## School of Business Administration
(O L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
16, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(B 2504)


**வரி விளம்பரம்**

### தவறிவிட்டது
பொன்னம்பலம் நித்தியானந்தன் என்பவருடைய அடையாள அட்டையும் (இல 530353893X) வெளிநாட்டு அடையாள அட்டையும் (இல. 080365) மல்லாகத்துக்கும், கைதடி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் 10 05-91 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது கைதடிப்பிள்ளையார் கோயிலில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.
(R-1387)

### தவறிவிட்டது
நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கணபதி சிவ ஞான பண்டிதர் என்பவருடைய அடையாள அட்டை யாழ்நகருக்குள் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R1389)

### பெற்றுக் கொள்ளவும்
(யாழ்ப்பாணம்)
மட்டுவிலைச் சேர்ந்த கனகரத்தினம் பேரின்பம் என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.


மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
**Spoken English, Short Hand Typing** (இரு மொழிகளிலும் போதிக்கப்படும்)
இத்துடன்
**O/L, A/L, I. A. B**
வகுப்புகளும் நடைபெறும்.
ஆரம்பம்: 18 05-1991

விபரங்களுக்கு:
**யாழ்ப்பாணக் கல்வி நிறுவனம்**
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)
யாழ்நகர் (B-2506)


# நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 14**



## பிரசன்னா
(இரத்தினம் சதானந்தன் - 8 ஆம் வாய்க்கால் உருத்திரபுரம்)

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படைகளுடன் ஏற்பட்ட மோதலையடுத்து காயமடைந்த நிலையில் வில்பத்துக் காட்டுப் பகுதியில் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

பிரசன்னா (இரத்தினம் சதானந்தன் - 118, எட்டாம் வாய்க்கால், உருத்திரபுரம்)

இதேஆண்டு மானிப்பாயில் இருந்த எமது சவர்க்காரத் தொழிற்சாலை ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்ட போது வீரமரணமடைந்த

கரன் (கணபதிப்பிள்ளை சிவசரணம் - கொடிகாமம்)
தேவு (சின்னையா சாந்தகுமார் - ஆனைக்கோட்டை)
குட்டி (சின்னத்தம்பி பரமேஸ்வரன் - நவாலி)

1988 ஆம் ஆண்டு கருவங்கேணியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

நாகவேல் - மாங்காடு

1989 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

2 ஆம் லெப் - டெஸ்மன் (வேலையா ரமேஸ்குமார் - திருக்கோணமலை)

இதே ஆண்டு மிருசுவிலில் இந்தியப்படையினரின் காவல் அரண் மீதான தாக்குதலின் போது வீரமரணமடைந்த

கப்டன் ஹில்மன் (கிருஷ்ணசாமி இராமச்சந்திரன், மீசாலை)

1990 ஆம் ஆண்டு காரைதீவில் தவறுதலான துப்பாக்கிச் சூட்டினால் எமைப்பிரிந்த

சுந்தர் (அகமட்லெவ்வை செய்லால்தீன் - வேப்பாளசேனை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி**
(B-2405)


# விக்னா கல்வி நிறுவனம்
52, அர்ச்சுனா வீதி (ஸ்ரான்லிவீதி) யாழ்ப்பாணம்.
**தீவக மாணவர்களின் நலன் கருதி**
**இறுதிப்பிரிவு 7 ஆரம்பமாகின்றது**

## O/L DAY CLASSES
ஆரம்பம் 15-05 91
நேரம் 8-30 - 1.30

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
மு. குறிப்பு: 1. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது
2. கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
(B-2505)


# நன்றி நவிலலும், 45ஆம் நினைவு நாள் அழைப்பும்

## வி. நீதிவண்ணன்
(நிதி)



| தோற்றம் | மறைந்தும் மறையாத |
|---|---|
| 12 - 10 - 72 | 1 - 4 - 91 |

திதி: 15 - 5 - 91

15-5-91 அன்று மறைந்தும் மறையாத எமது மகன் வி நீதிவண்ணன் பொருட்டு சாந்தி நிகழும் போது அவருக்காக இறைவனை சிந்தித்து வணங்குகின்றோம். அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இப்பிரார்த்தனை நிகழ்வில் உறவினர்களையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1 - 4 - 91 அன்று எமக்கு ஏற்பட்ட துக்கத்தில் பங்குகொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் வேண்டிய உதவிகள் புரிந்தவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சித்தங்கேணி (R-1388) குடும்பத்தினர்.

### ✵ சிந்தனைக்கு ✵

எம் அண்டை வீட்டுக்காரரைப் புறக்கணித்துவிட்டுத் தொலைவில் உள்ளவருக்குத் தொண்டு செய்ய நாம் முன் வரக்கூடாது.

— மகாத்மா காந்தி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி. யாழ்ப்பாணம். 14.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05


## கொழும்பில் பரீட்சை ஒரு முன்னுதாரணம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிற்கும் புதிதாக நியமிக்கப்பட்ட எண்பது டாக்டர்கள் இன்னும் பதவிகளை ஏற்கவில்லை எனத் தெரியவருகின்றது.

அதேவேளை கொழும்பில் தங்கியுள்ள யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க கொழும்பில் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலரும், மாணவர் சிலரும் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பிலும், உலகின் வேறுபாகங்களிலும் தரித்து உள்ளனர். வடக்கில் நிலவும் அசாதாரண நிலையினால் கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் ஏற்ற சூழ்நிலை இங்கு இல்லை என்பதே அவர்களின் வாதமாகும்.

ஆனால், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 75 வீதத்திற்கு மேற்பட்ட மாணவர்களும், விரிவுரையாளர்களும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு சமுகம் கொடுக்கின்றார்கள். விரிவுரைகள் பரீட்சைகள் நடைபெறுகின்றன. அத்தோடு பட்டமளிப்பு விழாவிற்கான ஏற்பாடுகளும் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது சிலவேளைகளில் சில தடங்கல்களைத்தவிர சகல விடயங்களும் வழமைபோல் நடைபெறுகின்றன.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் அசாதாரண நிலைமை நிலவுவதால் பரீட்சைக்குத் தோற்ற முடியாது எனக் கூறும் மருத்துவபீட மாணவர்களுக்கு கொழும்பில் பரீட்சை நடத்த முற்படுவது தவறான முன்னுதாரணம் என்றே கொள்ள வேண்டும்.

ஒரு சிலரைத் தவிர மருத்துவபீடத்தைச் சேர்ந்த மாணவர்களும் அங்கிருந்து வெளியேறும் டாக்டர்களும் சமூக நோக்குடன் மண்ணிற்கும், மக்களுக்கும் சேவை செய்வதாக இல்லை என்பது கவலை அளிக்கும் ஓர் உண்மையாகும். இலங்கையில் அதிக அளவில் டாக்டர்களை உருவாக்கிய யாழ். குடா நாட்டில் தற்போது டாக்டர்கள் பற்றாக்குறையால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர்.

அகதிமுகாம்களில் வெளிநாட்டு டாக்டர்கள் சேவை நிறுத்தப்பட்டதனால் தொற்று நோய்களும், மரணங்களும் அதிகரித்துள்ளன. கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் மடு அகதிமுகாமில் எட்டு குழந்தைகள் வயிற்றோட்டத்திற்கு பலியாகியுள்ளனர்.

இவ்வாறாக மக்கள் இங்கு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கையில், எமது டாக்டர்கள் தென்னிலங்கையிலும், வெளிநாடுகளிலும் சேவகம் செய்கின்றனர். இந்நிலையில், மீண்டும் அவ்வாறான நோக்கையே முழுமையாகக் கொண்டு கொழும்பில் தரித்திருக்கும் மாணவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் சிரமப்பட்டு ஏன் பரீட்சை நடத்த வேண்டும்.

தற்பொழுது கொழும்பில் தரித்துள்ள மாணவர்கள் திட்டவட்டமாக இங்கு வந்து சேவை செய்யப்போவதில்லை. அவர்களில் பெரும்பாலானோர் கொழும்பில்கூடத் தரிக்கப்போவதில்லை. பட்டத்தைப் பெற்றுக்கொண்டு வெளிநாடு ஓடவே அங்கு தரித்துள்ளார்கள்.

இவர்களுக்காக நாம் ஏன் எமது அரிதான வளங்களைப் பயன்படுத்த வேண்டும். முன்னுதாரணங்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

மூன்றாம் ஆண்டு மாணவர்களாகக் கொழும்பில் நின்று பரீட்சை எழுத முற்படுபவர்கள் நான்காம் ஆண்டு விரிவுரைகளையும் அங்கேயே வையுங்கள் என்று ஏன் கோரமாட்டார்கள். இதற்கு கொழும்பில் தரித்துள்ள விரிவுரையாளர்களும் விருப்பம் தெரிவிக்கலாம். தற்பொழுது பரீட்சை நடத்துவதால் இவர்களின் இந்தக் கோரிக்கைக்கு நியாயம் கற்பிக்கக்கூடியதாகவும் போய் விடக்கூடும்.

ஆகையினால் தமது முழுமையான சுயநலத்திற்காக மட்டும் கல்வியைப் பயன்படுத்த முற்படுவோருக்காக நெருக்கடிகளின் மத்தியில் செயற்படும் பல்கலைக்கழகம் சிரமப்படவேண்டிய அவசியம் இல்லை. அதேவேளை இம் முன்னுதாரணத்தைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்குமேயானால் தொடர்ந்தும் பல சிரமங்களை பல்கலைக்கழகம் எதிர்நோக்கவேண்டிவரும் என்பதும் வெளிப்படை.

## பெருமளவில் விதைகளைச் சேமிக்க வழிகள்

விவசாயிகள் அவரையினங்களாகிய கௌபீ, பாசிப்பயறு மற்றும் நெல் போன்றவற்றை அறுவடை முடிந்தவுடன் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு. பின்பு அவற்றையே நடுகைக்கும், உண்பதற்கும் கூடிய விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. இந்நிலையால் சில காலங்களில் விவசாயிகள் விதையைக் கூட பெற்றுக் கொள்வதில் சிரமம் கொள்கிறார்கள். இச்சிரமத்தை தவிர்க்க மரபுவழிமுறைக்கவனிக்க வேண்டும்.

பனை ஓலையில் செய்யப்பட்ட கூடை அல்லது மண் பானை (குறைந்தளவில் சேமிக்கலாம்) யில் சேமிக்கப்பட வேண்டிய பொருளின் அளவுக்கு ஏற்ப பாத்திரங்களை தெரிவு செய்யவும். கூடையின் உட்பாகமும், வெளிப்பாகமும் மாட்டுச் சாணத்தால் பூசி வெய்யிலில் காய விடுவதன் மூலம்சிறிய துவாரங்களையும் அடைத்துக்கொள்ளலாம். பானைக்கு சாணம்பூச வேண்டியதுஇல்லை இவற்றை மரத்தாலான தாங்கியின்மேல் உலர் குளிரான இடத்தில் நன்கு உலர்ந்த விதைகளை 6'' (ஆறு அங்குலம்) உயரமான படைகளாக இட்டு ஒவ்வொரு படைக்கும் இடையே உலர் நுண்ணிய மணல் அல்லது உலர் சாம்பலை இடும்போது இது விதைகளுக்கு இடையேயுள்ள இடைவெளியை நிரப்பும் இவ்வாறு விதைப் பொருள்களுக்கு இடையே உள்ள இடைவெளியை நிரப்பியபின் மேலே 1'' ற்கு மணல் அல்லது சாம்பலினால் நிரப்பி சேமிக்க வேண்டிய வித்துக்களை ஒரு வருடம்வரை சேமித்து வைக்கலாம். மணலில் இருந்தோ அல்லது சாம்பலில் இருந்தோ விதைகளை அரிப்பதன் மூலம் விதைகளைப் பிரித்தெடுத்துக் கொள்ளலாம். இதன் மூலம் 50 புசல் வரை விதைகளைச் சேமித்துக் கொள்ளலாம். பாத்திரத்திற்கேற்ப அதிகளவில் சேமித்துக் கொள்ளலாம். இங்கே விதைகள் இரசாயனத் தொடுகைக்கு உட்படாது பீடைகள் பங்கசுக்களின் தாக்கத்திற்கு உட்படாது, விதைகள் வாழ்தகவை இழக்க மாட்டா. (அதாவது, விதைப்பதற்குத் தகுதியான விதையாகக் காணப்படும்) பாத்திரம் உள்ளூரில் தயாரிக்கலாம். எனவே இம்முறை விவசாயிகளுக்கு மிகச் சிறந்த ஒரு முறையாகும். பல நன்மைகளை உடையதாகக் காணப்படுகின்றது

— தமிழீழ ஆய்வு நிறுவனம்.

### பிரான்ஸ்குழு மீதான தாக்குதலைத் தொடர்ந்து

## மடுதிருப்பதி அகதி முகாமில் வைத்திய சேவை சீர்கேடு

(வவுனியா)

சமீபத்தில் வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் பிரான்ஸ் தேச வைத்திய குழு உறுப்பினர்கள் மீதான சிறிலங்கா விமானப்படை விமானங்களின் குண்டு வீச்சு தாக்குதலை அடுத்து மடு திருப்பதி அகதி முகாமில் தஞ்சமடைந்திருக்கும் அகதி மக்களின் வைத்திய நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன.

மேற்படி குழுவினர் மடு திருப்பதி அகதி மக்களுக்கு செய்து வந்த வைத்தியசேவை நிறுத்தப்படலாம் என்றஅச்சம் அகதிகள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி மடு திருப்பதி அகதி முகாம் நிர்வகிப்பாளர் அருட்திரு. பீ. ஜேசுராஜா அவர்களுடன் இடம் பெற்ற சந்திப்பின்போது கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் மடு திருப்பதியில் தஞ்சமடைந்திருந்த 20 குழந்தைகள் வயிற்றோட்ட நோய்க்கு பலியாகியுள்ளனர். ஏற்கனவே இந்த அகதிமுகாமில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது இந்த நிலையில் பிரான்ஸ் தேச வைத்தியகுழு மடு திருப்பதி அகதி முகாம் மக்களுக்கான வைத்திய சேவையை நிறுத்திக் கொள்ளுமாயின் இந்த அகதி முகாமின் நிலை கவலைக்கிடமாகிவிடும் என்று ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஐக்கிய நாடுகள் அகதிகள் நிவாரணக் கழகத்தின் வாகனங்கள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து அந்த ஸ்தாபனத்தால் மடு திருப்பதி அகதி முகாமுக்கு எதுவித நிவாரணப் பொருள்களும் வந்து சேரவில்லை. இந்த ஸ்தாபனம் தொடர்ந்து மடு அகதி மக்களுக்கு சேவை செய்யும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர் அந்தச் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இந்த அகதி முகாமில் பிரான்ஸ் தேச வைத்திய குழுவால் மட்டுமே வைத்திய சேவைகள் செய்யப்பட்டு வந்தன என்று குறிப்பிட்ட அவர் சிறிலங்கா அரசால் இந்த அகதி மக்களுக்கென குறிப்பிடக்கூடிய அளவிற்கு உதவிகள்வழங்கப்படவில்லை என்றார்.

சில தினங்களுக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக கலை - விஞ்ஞானபீட மாணவர்கள் சுமார் 45 பேர் மடு திருப்பதி அகதிமுகாமிற்குவந்துள்ளனர். இவர்கள் இடம் பெயர்ந்த மக்களின் தேவைகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். மற்றைய நிறுவனங்களின் உதவியுடன் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க அவர்கள் எண்ணியுள்ளனர் என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (தி)

## திருமறைக் கலா மன்றத்தின் கலை நிகழ்ச்சி

(குருநகர்)

யாழ் - திருமறைக் கலா மன்றம் இம்மாதம் 25ஆம் 26ஆம் திகதிகளில் இருநாள் கலை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6-மணிக்கு தூய ஆவி திருவிழாவை ஒட்டி இசை மாலை நிகழ்ச்சியும்

26 - ஆம் திகதி ஞாயிறு மாலை 6-மணிக்கு கிராமியக் கலை விற்பன்னர்கள் தோன்றும்கிராமியக்கலைஅரங்கமும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

(21)

## புனர்வாழ்வுக் கழகத்தினர் வன்னி சென்றனர்

(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்ட மக்களுக்கு வைத்திய புனர்வாழ்வு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் குழுஒன்று வன்னி மாவட்டத்திற்கு சென்றுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சச்சிதானந்தம், வரதலிங்கம் (முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்கள்) நினைவாக நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி சாரணர் குழுவை எதிர்த்துக் கொக்குவில் இந்துக் கல்லூரி மோதியது. இதில் யாழ். இந்துக்கல்லூரி சாரணர் குழுவெற்றி பெற்றது. ஹரிச்சந்திரா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் சென்றலைட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நொதேண்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது இதில் சென்றலைட் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கேடயத்தைத் தட்டிச் சென்றது.

## அஸாமில் கடும்மழையினால் 20 பேர் பலி; பலர் பாதிப்பு

(அஸாம்)

அஸாமில் கடந்த மூன்று நாட்களாகப் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பிரமபுத்திரா வெள்ளத்தாக்கில் இருபது பேர் வரை உயிரிழந்துள்ளனர்

இந்தப் பள்ளத் தாக்குப் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. நீரால் சூழப்பட்ட பல பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கிப் போயிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. சேத விபரங்கள் குறித்து தெளிவான தகவல்கள் இது வரை கிடைக்கவில்லை.

மீட்பு உதவிப் பணிகளில் இராணுவமும், விமானப் படையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

## விண்ணப்பங்கள் 15க்கு முன் சமர்ப்பிக்கவும்

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் க. பொ. த. உயர்தர புதிய வகுப்புக்களில் சேர்வதற்குரிய விண்ணப்பங்களை 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி கல்லூரி அதிபர் திருமதி ய. தியாகராஜா அறிவித்துள்ளார்: 1990ஆம் ஆண்டு சாதாரணத் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் எனவும் இதற்கான அனுமதிப் பரீட்சை 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கம்யூனிஸ்ட் - காங்கிரஸ் நேபாளத்தில் கடும் போட்டி

(காட்மண்டு)

நேபாளத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளின்படி ஆளும் நேபாள காங்கிரஸ் கட்சிக்கும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவுவதாக இறுதியாகக் கிடைத்துள்ள தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. நேற்று இரவுவரை வெளிவந்த ஆறு முடிவுகளில் நான்கு இடங்களை நேபாள காங்கிரஸ் கட்சி கைப்பற்றி உள்ளது. இருந்த போதிலும் இந்தக் கட்சியின் தலைவரும் நேபாள நாட்டின் பிரதமருமான கிருஷ்ண பிரசாத் பட்டாராய் பின்னடைந்த நிலையில் இருந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் முப்பத்திரண்டு வருடங்களின் பின் நடைபெறும் இந்த தேர்தலில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி காட்மண்டு நகரப் பகுதிகளிலும் புறநகர் பகுதிகளிலும் முன்னணியில் இருப்பதாகவும் கிராமப்புறங்களிலும் இந்தியாவை அண்டியுள்ள தெற்கு நேபாளப் பகுதிகளிலும் நேபாள காங்கிரஸ் முன்னணியில் நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சாலை விபத்தில் வருடம் 1,80,000 பேர் பலி

(டில்லி)

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களால் உலகம் முழுவதும் ஆண்டு தோறும் 1,80,000 பேர் உயிர் இழக்கின்றார்கள் என இந்தியாவில் வெளியிடப்பட்ட புள்ளி விபர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விபத்துக்களால் இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 2500 பேர் உயிர் இழக்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரேமாவுக்கு வாழ்த்து; மக்களுக்கு நன்றி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டியதையிட்டுப் பிரேமதாஸவுக்கு ஈ. பி. டி. பி. வாழ்த்து தெரிவித்திருக்கிறது.

அது தனது அறிக்கையில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு இந்த வெற்றிக்கனியை வழங்கிய மக்களுக்கு நன்றி கூறியதுடன் ஜனாதிபதி எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்கு எப்பொழுதும் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளது.

## உதவி நடவடிக்கையில் பல்கலைக்கழகமாணவர்கள்

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதிலும், சமூக சேவையில் ஈடுபடுவதிலும் யாழ் பல்கலைக்கழகமாணவர்கள் அண்மைக்காலமாகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஓர் அங்கமாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து முகாமகளை அமைப்பதிலும், இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் 50 மாணவர்களை உள்ளடக்கிய குழுவொன்று கடந்த வாரம் பளை மடுப்பகுதியில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் சரீர உதவிமூலம் நிறைவேற்றுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுடன் கடந்த வருடம் யுத்தம் ஆரம்பித்தவேளை மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் அகதிகளுக்கென திரட்டிய அறுபதினாயிரம் ரூபாவிற்குப் பால் மாவைக் கொள்வனவு செய்து தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள சிறு பிள்ளைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் வழங்கியுள்ளனர். இதேபோல் மடுப்பகுதியில் உள்ளவர்களுக்கும் வழங்கியுள்ளனர்.

## இன்று உதவிப்பண விநியோகம்

(மண்டைதீவு)

புளியங்கூடல் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த புளியங்கூடல் உபதபாற்கந்தோரில் மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட உள்ளது. இப்பணம் இன்று காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரைக்கும் வழங்கப்படும்.

மார்கழி 1990, தை 1991ற்கான கொடுப்பனவு தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை பல. நோ. கூ. சங்க தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். உதவிப்பணத்திற்கு உரியவர் நேரில்வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று புளியங்கூடல் கிராம சேவையாளர் மு. விஜயரத்தினம் தெரிவித்துள்ளார்.

## காரைநகர் மாணவர் பதிவுசெய்யவும்

காரைநகர் பாடசாலைகளில் 11ஆம் ஆண்டில் 1990 ஆம் ஆண்டு கல்விகற்றவர்களில் க. பொ. த உ த. வகுப்புக்கு அனுமதிப்பதற்கான பரீட்சையில தோற்ற உள்ள மாணவர்கள் தமது பெயர்களை 15-05-91க்கு முன்னர் நாவலர் மகாவித்தியாலத்தில் தினமும் பி. ப. 12.00 மணிமுதல் 2.00 மணிவரை பதிவு செய்யுமாறு கொத்தணி அதிபர் தெரிவித்துள்ளார்.

## கப்டன் சுந்தருக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சின்னமடு இராணுவ முகாமின் காவலரண்மீது தாக்குதலை மேற்கொண்டு அதனை அழித்த பின்னர் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட நெடுந்தீவைச் சேர்ந்த வீரவேங்கை கப்டன் சுந்தர் (அடைக்கலம் அமிர்தநாதன்) அவர்களின் பூவுடல் மக்கள் அஞ்சலிக்காக நேற்றுக் காலை 10 மணிமுதல் நாவாந்துறை சென்நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டது.

இத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

காலை 10மணிமுதல் மக்கள் வேங்கையின் பூவுடலுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்திய வண்ணம் இருந்தனர்.

மாலையில் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு வீரவேங்கையின் பூவுடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டபோது மக்கள் வீதிகளின் இருமருங்கிலும்நின்று மலர்தூவித் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். வீட்டு வாசல்களில் குத்துவிளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. நேற்று மாலை மாவீரர் மயானத்தில் வேங்கையின் பூவுடல் தீயுடன் சங்கமமாகியது.

மேற்படி தாக்குதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல நவீனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

சின்னமடு

பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ கே.எல்.எம்.ஜி - 01
- ★ ரம் மகசீன் - 01
- ★ ரவைக்கோர்வைகள் -165
- ★ ரீ - 56- 1 ரக துப்பாக்கிகள் - 03
- ★ ரீ - 56 - II ரகத் துப்பாக்கிகள் - 06
- ★ ஏ. கே. ரவைக்கூடுகள் - 13
- ★ ஜே ஆர் கைக்குண்டுகள் -08
- ★ ஐ. எம் ரவைகள் - 3053

## தமிழகத்திற்கு 2,06000 வாக்குப் பெட்டிகள்

(சென்னை)

தமிழ்நாட்டில் இம்மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலுக்காக இரண்டுலட்சத்தி ஆறாயிரம் தேர்தல் வாக்குப்பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் எட்டுக்கோடியே எட்டுலட்சம் வாக்குச்சீட்டுக்களும் அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

21 ஆம் நூற்றாண்டு

குறிப்பிடப்பட்டுள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வெற்றியளித்துள்ள போதிலும் சனத்தொகை எதிர்பார்த்ததைவிட விரிவாக உயர்ந்துவிடும் என நிபுணர்கள் கருதுகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக

தற்கு அனுமதி பெற்றிருந்தனர்.

இறுதியாக வடபகுதிக்கு வந்த கப்பலில் இந்த எரிபொருள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டது. தற்போது பல்கலைக்கழக களஞ்சியத்தில் வைத்து கொள்கலன் திறக்கப்பட்டு பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்து பார்த்தபோது மண்ணெண்ணெய் டீசலுடன் கலக்கப்பட்டுள்ளது என்றும்மேலும் கொள்ளளவிலும் குறைவாக காணப்பட்டதாகவும் கூறப்பட்டது. (லோ)

கருப புலிகள்

யில் வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் கழக மைதானத்திலும், தென்மராட்சியில் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மைதானத்திலும் மாலை ஆறு மணி அளவில் நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

ஆனையிறவு

பகல் 3.30 மணியளவில் இரண்டு குண்டுவீச்சு விமானங்களும், இரண்டு ஹெலிகொப்ராக்களும் தாக்குதலை மேற்கொண்டன. ஹெலிகளில் இருந்து கலிபர்த் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன. சேத விபரம் தெரியவில்லை.

மூன்றுவார

ஙளுக்கான வழமையான உலர் உணவு விநியோகத்தையும் மேற்கொள்ள வேண்டுமாயின் உலர் உணவு பற்றாக்குறை ஏற்படும் என்றும் இந்நிலையில் கப்பலை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச)

தனிப்பட்ட

கான தகுதிகாண் பரீட்சை நடாத்தப்பட்டு போதியளவு பெறுபேற்றை பெறுபவர்கள் உயர்தர வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இது பாடசாலை மாணவர்களுக்கே பொருந்தும் எனவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் தாம் விரும்பினால் மட்டுமே மேற்படி பரீட்சைக்கு தோற்றி உயர்தர வகுப்பில் கற்கலாம் எனவும் இது ஓர் தற்காலிகமான நடவடிக்கைகள் எனவும் இப்பரீட்சார்த்தியே கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி அதில் தகுதி பெற்றால் மட்டுமே உயர்தர வகுப்பில் தொடர்ந்து பயில அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆவணி மாதம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி தேறிய பின்னரே உயர்தர வகுப்பில் பயில்வதற்காக தாம் விரும்பும் பாடசாலைக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

## கிணற்றில் குதித்து குடும்பஸ்தர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மக்கள் முன்னணிக்காரியாலய வளவிலுள்ள கிணற்றில் குதித்துக் குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

கப்பத்துறைச்சேர்ந்த குப்புசாமி ராமசாமி (வயது 45) என்பவரே கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இவருடைய மகளினாலும், மனைவியினாலும் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை விசாரிப்பதற்காக கூட்டிவந்து மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் தங்கவைத்தபோதே இவர் தற்கொலை செய்துள்ளார்.

இவருக்கெதிராக முறைகேடான நடத்தை கொடர்பாகவே முறைப்பாடுசெய்யப்பட்டிருந்ததாகவும், தனது அசிங்கமான செயல் விசாரணையின் போது வெளிப்படப்போகிறதென்ற அவமான உணர்வு காரணமாகவே இவர் தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரியவருகிறது.

காட்டுக்குள்

இரவு பத்து மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குவாட்டோய், திருக்கணாமடு, சிங்கபுர, கரடிக்குளம், கதிரவெளி, வாகரை, மாங்கேணி ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் காட்டுப் பகுதிக்குள் இறங்கித் தேடுதல் வேட்டை நடாத்த முயன்றனர் இந்த இராணுவத்தின் மீது சனிக்கிழமை காலை 7-10 மணியளவில் ஆண்டாங்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலால் இராணுவத் தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

## திருட்டு முயற்சி தோல்வி

(நல்லூர்)

மந்திகை வைத்தியசாலையில் பணிபுரியும் பிரான்ஸ் நாட்டு வைத்தியர்களின் விடுதியில் இருந்த எரிபொருளைத் திருட வந்த திருடர்கள் சிலர் காவலாளியைக் கண்டு ஓட்டம் எடுத்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இடம் பெற்றது. திருடர்கள் களவாடக் கொண்டு வந்த கொள்கலன்களை கைவிட்டு ஓடியதால் வைத்தியசாலை காவலாளிகள் அவற்றை கைப்பற்றினர். (85)

## சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பத்து மாதப் பாலகன் ஒருவன் நெஞ்சுவலி காரணமாக மரணமடைந்துள்ளான்.

நாவாந்துறையைச் சேர்ந்த அன்ரன் அகில்ராஜ் 10 மாதம்) என்ற சிறுவனே மரணமானவனாவான்.

## மரண அறிவித்தல்

### சிங்கராஜர் அருட்பிரகாசம்

(கூட்டுறவு அலுவலகம், கிளிநொச்சி)

சிங்கராஜர் அருட்பிரகாசம் அவர்கள் 13-05-91 அன்று காலமாகி விட்டார். இவர் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சிங்கராஜரின் (மலேசியா) அன்புமகனும், திருமதி மேரி றெயீனாவின் அன்புக்கணவரும், டெய்சி அல்போன்ஸ் ஜேம்ஸ் (இந்தியா), பற்றிக் (வசந்தன்) கொன்சி, யோன் ஆகியோரின் அன்புத் தகப்பனாருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 14-05-91 செவ்வாய்க்கிழமை 3 மணியளவில் கிளிநொச்சி குழந்தை யேசு ஆலயத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

154, வசந்த நகர்,
திருமுறுகண்டி.

தகவல்:
டெய்சி (மகள்)

(R/1390)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.